RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s11

# மானிடவியல் நோக்கில் மனித இனக்கூறுகள்

**வே. ராணி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அன்னை மகளிர் கல்லூரி, கரூர்-639136, தமிழ்நாடு, இந்தியா

# Human elements from an anthropological point of view

**V. Rani** [a, *]

[a] Department of Tamil, Annai Women's College, Karur–639136. Tamil Nadu, India.

* Corresponding Author: raniharishitha33@gmail.com

Received: 01-02-2021
Revised: 31-08-2021
Accepted: 04-09-2021
Published: 24-01-2022

Check for updates

**ABSTRACT**

During the time when the human race lived nomadically without a place, Man was given grammar and the lord of nanilam was Thamizhan. Sangam literary songs are an immovable historical trace of society, which is an experiential experience of Tamils who have touched the top of happiness by treating life as a boon. In Tamil Nadu, ethnic groups are discriminated against on the basis of dinas. This discrimination is in line with anthropological interpretation. Both birth and death were considered sacred in the tribal society. They realized the changes in nature and changed their lives accordingly. Changes are considered to be the stages and steps of the development of the ethnic society. As the tribals of Tamil Nadu merged with the other classes, many cultural elements developed in their lives. Human origin, ethnic identities, primary divisions of anthropology, Tamil origin, speciality of human species, status of tribes in India etc. are explained.

**Keywords:** Human elements, Anthropological, Thamizhan cultural, Tribes.

## முன்னுரை

பொதுவாக மனித படைப்பை விட மனித இனத்தை பற்றிய ஆய்வானது முக்கியமான ஒன்றாகத் திகழ்கிறது. ஆய்வின் மூலம் மட்டுமே மனித இனங்களில் பொதிந்துள்ள செய்திகளை வெளிக் கொணர முடியும். அந்த வகையில் மனித இனவரைவியல், மானிடவியல் போன்றவற்றில் கூறப்பட்டுள்ள மனித இனப் பண்பாட்டை பற்றியும் மனித இன வேறுபாடு பற்றியும் விளக்கியுரைக்கப்பட்டுள்ளன.

## மானிடவியல்

உலக உயிரினங்களில் மனித இனமே உயர்ந்த உயிரினமாகக் கருதப்படுகிறது. அதன் அடிப்படையில் மானிடவியல் என்ற புதிய துறை மனிதர்களைப் பற்றி அறியக்கூடிய ஓர் அறிவியல் துறையாக வளர்ந்துள்ளது. இதை ஆங்கிலத்தில் Biological anthropology என்று அழைப்பார்கள். Biological anthropology என்ற இச்சொல் கிரேக்கச் சொற்களின் மூலங்களைப் பெற்றது. இவ்விரு சொற்களையும் இணைத்துப் பொருள் கொண்டால் மனிதனைப் பற்றிய அறிவியல் என்று பொருள் வருகிறது. “மனிதனை உயிரியல் நிலையிலும் பண்பாட்டு நிலையிலும் ஆராயும் ஓர் அறிவியல் துறையே மானிடவியல்” (Agathiyalingam, 1984). மனித இனத்தையும் அதன் பண்பாட்டையும் பற்றிய அறிவியல் துறை மானிடவியல் துறையாகும்.

## மானிடவியல் தோற்றம்

மானிடவியல் பற்றிக் கூறும் பொழுது காலத்தாலும் இடத்தாலும் அதன் எல்லைகள் பரந்துபட்டு காணப்படுகிறது. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்த குடிகளும் உலகின் மூலை முடுக்குகளில் வாழும் இனங்களுள் பல்வேறு நிலைகளில் வேறுபட்டு காணப்படுகின்றன. மானிடவியல் மிக நீண்ட வரலாற்றைக் கொண்டு அண்மைக் காலங்களில் தோன்றி வளர்ந்த துறையாகும்.

சர் எட்வர்ட் பர்னட் டைலர் கிபி.1884 ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் மானிடவியல் துறைக்குப் பொறுப்பேற்ற ஆண்டுதான் இத்துறை முறைப்படியான தோற்றத்தைப் பெற்றது. மானிடவியல் தோன்றிய காலம் முதல் இன்றைய நிலைவரை 4 கட்டங்களாக வளர்ச்சியடைந்துள்ளது.

1. கருவுற்ற காலம்
2. ஒரு முகப்படுத்தப்பட்ட காலம்
3. ஆக்கநிலைக் காலம்
4. வளர்ச்சியுற்ற காலம்

இதன் மூலம் புதிய புதிய இனத்தவர்களைத் தெரிந்து கொள்ள முடிகிறது. மானிடவியல் சார்ந்த சிந்தனை பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

## மனிதன் - உருவான விதம்

தனது முழுமையை நோக்கிய பயணத்தல், ஓரறிவு முதல் ஐயறிவு வரை, தனது இயல்பூக்க அறிவாக இருந்து அவற்றை அந்தந்தச் சூழ்நிலைக்கு ஏற்றபடி வடிவமைத்து நடத்தி வந்தது. ஐந்தாவது அறிவு நிலை அடைந்ததும் உடலைச் சார்ந்த தேவைகள் அனைத்தும் பஞ்ச பூதங்களான இயற்கை வளத்திலிருந்து பூர்த்தியாகின்றன.

பஞ்ச பூதங்களிலிருந்து வெளிப்படும் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்ற ஐந்து விளைவுகளைத் துணையாகக் கொண்டு தேவையான உணவைத் தேடி அடையும் வகையில் தான் இறையாற்றல் ஐம்புலன்களையும் முறையாக மலரச் செய்தது ஐம்புலன்களின் உதவியால் உடல் தேவைகள் நிறைவு பெற்றவுடன் அகமாக உள்ள பேரறிவு தன்னையே, அறிந்து கொள்ளவும் தான் வாழ்ந்து கொண்டுள்ள இயற்கையைப் பற்றியும், பிரபஞ்சத் தோற்றங்கள், பற்றியும் இவையனைத்திற்கும் காரணப் பொருளான இறைநிலையைப் பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது.

ஐயறிவு நிலையிலிருந்து ஆறாவது நிலையாகிய மனித நிலையை அடைய இறையருளே, தன்மாற்ற மலர்ச்சியில் தனக்குத்தானே அமைத்துக் கொண்டுள்ள இயக்க நியதிகள் மூன்றையும் தகர்த்து விட்டு ஆறாவது அறிவுடைய மனிதனாக மாற்றம் பெற்றது.

## மூன்று நியதிகள்

1. வேறுபட்ட உயிரினங்கள் இனச்சேர்க்கை கொள்ளாது
2. சந்தர்ப்ப வசமாக இனச்சேர்க்கை கொண்டாலும்
3. கரு உருவானாலும் வெளிப்படும் சந்ததி மலடாக இருக்கும்.

இம்மூன்றும் கடுமையான இயற்கைச் சட்டங்களும் மனிதத் தோற்றம் வருவதற்காக மீறப்பட்டிருக்க வேண்டும் ஏனென்றால் எடுத்துக்காட்டாக,

மான்கள் இணைந்தால் மான்குட்டிதான் பிறக்கும். ஓர் உயிரினத்தின் அமைப்பு, துல்லியம் இயக்க ஒழுங்கிற்கு ஒத்தவற்றுடன் தான் இனவிருத்தி செய்ய முடியும்.

எனவே இம்மூன்று நியதிகளையும் தாண்டி, இயற்கையில் ஏதோ ஒரு நிகழ்வு நடந்திருக்க வேண்டும். வேறுபட்ட இனங்கள் இனச்சேர்க்கை கொண்டு, கரு உருவாக பிறந்த சந்ததி மலடு அற்றதாகப் பிறந்திருக்க வேண்டும். இதுவே முதல் மனிதன் தோன்றிய வகையாகும்.

முதலில் தோன்றியது ஒரு பெண்ணாகத்தான் இருந்திருக்க வேண்டும். அப்போது தான் மீண்டும் மீண்டும் சேர்க்கை உண்டாகி 'மனித உருவத்தோற்றங்கள்' ஏற்பட்டிருக்கக்கூடும்.

டார்வின் பரிணாம தத்துவமும் முதல் மனித உருவத் தோற்றமுடைய பெண் ஆப்பிரிக்காவில் தோன்றியதாகக் கூறப்படுகிறது. இயற்கையின் இயல்பான செயல்பாட்டிலிருந்து வேறுபட்டு, திடீர் மாற்றமாக இறையாற்றலே நிகழ்த்தும் இந்நிகழ்வே 'சடுதி மாற்றம்' எனப்படுகிறது.

## மனிதனின் சிந்தனையாற்றல்

மனித இனம் தோன்றி அறுபத்தைந்து இலட்சம் ஆண்டுகள் ஆகியிருப்பதாக அகழாய்வில் அறிஞர்கள் கருதுகின்றனர். அப்போதிருந்தே மனிதனின் சிந்தனையாற்றல் வளரத் தொடங்கியது. இயற்கையில் நிகழும் மின்னல், இடி, மழை, வெள்ளம், வறட்சி எரிமலை, புயல் காட்டுத் தீ போன்ற நிகழ்ச்சிகள் மக்களை அச்சத்திற்கு உள்ளாக்கி இருக்க வேண்டும்.

தன்னுடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாக உள்ள அந்த ஆற்றல் எது? எங்கேயிருந்து கொண்டு இவற்றை நடத்துகிறது. என்று சிந்திக்கத் தொடங்கிய மனிதன், அறிவால் மேம்பட்டு மேம்பட்டு பிரபஞ்சத் தோற்றமெல்லாம் விண்களின் கூட்டே என்றும் விண்ணிற்கு மூலமாக இருப்பது எல்லையற்றதாக உள்ள சுத்தவெளியே என்றும் தெளிவு பெறுகிறான்.

அதே போன்று தனக்கு மூலம் எது என்று ஆராய்ந்த போதும் பெற்றோர் முன்னோர் வழியாக ஆதி மனிதர் வரை சென்ற, பின்பு ஐயறிவு உயிரினத்திலிருந்து ஓரறிவு உயிரினம் வரை மேலும் சென்று தொடர்ந்த ஆராய்ச்சியில் பஞ்ச பூதங்களையும் தாண்டி, உலகின் நியதியை அறிந்து தெளிவு பெற்றான்.

இன அடையாளங்கள் தோன்றுதவற்கும், உருவாவதற்கும் மங்குவதற்கும் மறைந்து போவதற்கும் சிக்கலான வாழ்க்கை நிலைகளே முக்கியக் காரணமாக அமைகிறது. மாறாத ஜீன்களின் மறு சேர்க்கையின் விளைவாகவே இனங்கள் தோன்றின என்பது விஞ்ஞானிகளின் கருத்து.

## இனம்

"இனம்", "நாட்டினம்" என்ற சொற்களை ஒரே அர்த்தத்தில் பயன்படுத்துகிறோம். ஆனால் உண்மையில் "இனம்" என்ற கருதுகோள் உயிரியலைச் சேர்ந்தது நாட்டினம் என்ற கருத்தை மறுக்கும் ஏராளமான மெய் விவரங்களை மானிட இயல் நமக்குத் தருகிறது.

மனித இனங்கள் பல விலங்கு இனங்களைக் காட்டிலும் மிகக் குறைந்த அளவே துல்லியமாக வரையறுக்கப்பட்டிருக்கின்றன. உயிரியல்சார் மானிடவிடவியலார் இனவேறுபாடுகள் மற்றும் அதனோடு தொடர்புடைய அனைத்து வகை ஆய்வுகள் ஆகியவற்றிலும் ஈடுபடுகின்றனர் உடல்சார் மானிடவியல் சில முதன்மையான உட்பிரிவுகளை உள்ளடக்கியது என்று கூறுகிறார் பக்தவத்சல பாரதி (Baktavatchala Bharathi, 2003)

இனத்தோற்றமுறை மானிடத்தோற்ற முறையுடன் மிக நெருங்கியத் தொடர்பு கொண்டுள்ளது.

மனித இனங்களின் வேர்களைக் கண்டறிவதற்கு மனிதகுல வாழ்க்கையின் ஆழத்தில் இருந்து பார்ப்பது இன்றியமையாதது. மனிதகுலம் மனிதக் குரங்குகளின் ஒரே இனத்திலிருந்து தோன்றியது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்வதும் இனங்கள் தோன்றிய முறையை கண்டறிந்து விலங்குகளின் இனவகை கிளைகள் உருவான நிகழ்முறையுடன் ஒப்பிடுகையில் தான் அவை தனி வகையானது என்பதை ஆதாரங்களுடன் நிர்ணயிக்க முடியும். மானிடவியல் என்பது மனிதர்களைப் பற்றி ஆராய்கின்ற போது, அதில் முக்கிய அங்கமாக பழங்குடிகளின் பங்கு இடம் பெறுகிறது.

## பழங்குடிகள்

Tribe என்னும் ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பாக பழங்குடி எனும் சொல் பயன்படுத்தப்படுகிறது. மேலும் "இனக்குழு மக்கள்" என்றும் "மலைவாழ் மக்கள்" என்றும் இச்சொல்லுக்கு வேறு மொழி பெயர்ப்புகள் தமிழறிஞர்களால் தரப்படுகின்றன (Naseemdeen,1989).

"பரிமேலழகர்" பழங்குடி என்னும் சொல்லுக்குத் 'தொன்று தொட்டு வருகின்ற குடியின்கட் பிறந்தார்" எனப் பொருள் தருகின்றார். சின்காவின் கருத்துப்படி, தனியாக்கப்பட்ட உயிரின வாழ்க்கைச் சூழல்படியும் சமூக நிலைப்படியும் பொருளாதார சம்பந்தமாகவும் அரசியல் சம்பந்தமாகவும் மற்றவரிடமிருந்து வேறுபட்ட புனித இனக்குழுவே பழங்குடி என்பதாகும்.

பழங்குடி என்னும் சொல் மானிடவியலாளரிடையே பல வகையான கருத்து வேற்றுமைகளை உருவாக்கி உள்ளது.

சிலருடைய கருத்துப்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அங்கத்தினர்கள் உறவுடையவர்களாகவும் ஒரே மொழியைப் பேசுபவர்களாகவும், குழுக்களாக அடுத்தடுத்த நிலப்பரப்புகளில் வாழ்பவராகவும் காணப்படுவர் அவர்களிடையே உறவுமுறை மிக ஆழத்தில் வேரூன்றி இருக்கும் .

## இந்தியாவில் பழங்குடிகள்

இந்தியாவில் பழங்குடிகள் வாழும் பகுதிகளைப் பூகோள அடிப்படையில் ஐந்து பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. இமயமலைப்பகுதி
2. மத்திய இந்தியா
3. வடகிழக்கு இந்தியா
4. மேற்கு இந்தியா
5. தென்னியா மலைப்பிரதேசங்கள்

உலகில் மக்கள் தோன்றி லட்சக்கணக்கான வருடங்கள் ஆகின்றன.

அன்றைய தென்னிந்தியாவில் உலகில் மனிதன் எப்படியெல்லாமோ வாழ்ந்து பரிணாம வளர்ச்சியடைந்தான். உலகத்தை மாற்றினான் தானும் மாறி மகத்தான வளர்ச்சி பெற்றான்.

நாகரிகம் எட்டாத இயற்கையின் குழந்தைகளாகவே இன்னும் வாழ்ந்து வரும் பல பழங்குடி மக்களைப் பற்றித் தெரிந்து கொள்வது ஓர் இனிமையான அனுபவம். தொன்மையான நாகரிகம் கொண்ட தமிழகத்தின் பல பகுதிகளில் பழங்குடி மக்கள் மலைப்பகுதிகளில் வாழ்கின்றனர். இன்று இந்திய நாட்டில் மூன்று கோடிக்கும் அதிகமான பழங்குடி மக்கள் வாழ்கின்றனர்.

தமிழ் அல்லது தமிழுடன் தொடர்புள்ள திராடவிட மொழியினைப் பேசுபவர்கள் தமிழகப் பழங்குடி மக்களாவர் (Thamarai Pandian, 2008).

## இன அடையாளங்கள்

உடலமைப்பு இயலையும் உடலியலையும் முளைக்கரு இயலையும் புதைப்படிவ இயலையும் முதன்மையான ஆதாரங்களாகக் கொண்டு விஞ்ஞானிகள் இனங்களை ஆராய்கின்றனர். ஆனால் மானிட வகை வருணனை இயலையும் கருத்தில் கொள்வது மானிட இயல் ஆராய்ச்சியாளர்களுக்கு மிக மிக அவசியமானது.

உடலின் வெளித்தோற்றச் சிறப்புத் தன்மைகளில் வெவ்வேறு நாடுகளிலுள்ள மக்கள் ஒருவருக்கு ஒருவர் பெரிதும் வேறுபடுகிறார்கள்.

1. தோல், தலைமயிர், கண்கள் ஆகியவற்றின் நிறம்.
2. தலைமயிர், மேல் இமை, மூக்கு உதடுகள் ஆகியவற்றின் வடிவம்
3. முகம், தலை ஆகியவற்றின் அமைப்பு

இந்த அடையாளங்கள் ஒரே நாட்டு மக்களுக்குள்ளும் வேறுபடுகின்றன.

ஆயினும் இந்த அம்சங்களின் குறிப்பிட்ட சேர்க்கைகள் கணிசமாக நிலைத்த வம்ச வழித்தன்மை கொண்டவை. எனவே இவற்றைப் பெற்றிருப்பவர்களை ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவராக எண்ணுவதற்கு இந்த அடையாளங்கள் ஆதாரமாக விளங்குகின்றன.

## அறிஞர்களின் அடையாள அளவுகோல்

1. ஆராய்ச்சிப் பயணங்களில் தோலின் நிறத்தைத் தீர்மானிப்பதற்கு: லுஷான் என்பவரின் அளவுகோல் உகந்தது. இது ஒளியைப் புகவிடாத 36 கண்ணாடிகளைக் கொண்டது.
2. தலைமுடியின் நிறத்தை நிர்ணயிப்பதற்கு: பிஷர் என்பவரின் அளவுகோல் பயன்படுகிறது.
3. விழித்திரையின் நிறத்தைத் தீர்மானிப்பதற்கு மார்டின் என்பவரால் தொகுக்கப் ஸால்லர் என்பவரால் செப்பம் செய்யப்பட்ட அளவுகோல் கையாளப்படுகிறது.

மேலும், உடலமைப்பு இயலை மானிட இயல் நோக்கில் ஆராய்வதன் மூலம் அளவு கடந்த முக்கியத்துவம் உள்ள விவரங்கள் பெறப்படுகின்றன மண்டையோடுகள் மீது நடத்தப்பட்ட மிகப்பெருத்த எண்ணிக்கையுள்ள ஆராய்ச்சிகளின் விளைவாக மண்டையோடு அமைப்பு இயல் என்னும் மானிட இயல் கிளை தோன்றி வளர்ந்திருக்கிறது.

இத்தகைய இனக்குழு மக்களின் வெளித்தோற்றம், உடலின் வடிவம், ஒப்ப அளவு விகிதம், உள் கட்டமைப்பு ஆகியவை கணிசமாக நிலையான அடையாளத் தொகுதிகளைப் பெற்றிருக்கின்றன.

இனப் பகுப்பாய்வு என்பது ஒரு மக்கள் இனம் உருவான வரலாற்றை நன்றாகப் புரிந்து கொள்ள உதவுகிறது. ஏனெனில் ஒரு மக்கள் இனத்தில் ஒன்று அல்ல, பலமானிட இயல் மாதிரிகள் அடங்கி இருப்பது வழக்கம். எனவே, மானிட இயலின் இன ஆராய்ச்சி இயல் அல்லது மானிட வகை வருணனை இயல் என்பது வரலாற்றின் முக்கிய ஊற்றுக்கண்ணாகத் திகழ்கிறது.

## மானிடவியல் அணுகுமுறை

அறிவுத் துறைகளிலேயே கலை, அறிவியல் என்ற இரண்டையும் உள்ளடக்கிய ஒரு பரந்த பல்துறையாக இன்று விரிந்து நிற்பது மானிடவியல் எனலாம். மனித குலத்தை நான்கு பரிமாணங்களுடன் நோக்குகிறது

1. கடந்த காலம்
2. நிகழ்காலம்
3. பண்பாடு
4. உயிரியல் நிலை

மானிடவியலானது பல நாடுகளில் சூழலுக்கேற்ப அந்தந்த நாடுகளின் சமூக பண்பாட்டு முறைகள் பற்றிய முக்கியத்துவம் பெற்ற அந்தந்த நாட்டு மானிடவியல் மரபுகள் தோன்றின.

1. தண்ணீர் தான் மூலப் பொருள், அதிலிருந்துதான் அனைத்து உயிரினங்களும் தோன்றின என தாலஸ் கூறினார்.
2. வெப்ப ஆற்றலின் மூலமே முதல் உயிர் தோன்றியது என்றார் அனெக்சிமாண்டர்.

மானிடவியல் எனும் அறிவுத்துறை மனித இனம் அதன் பண்பாடு சமூகங்களின் அமைப்புகள் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் உறவுமுறைகள், மொழிக் கூறுபாடுகள் ஆகியவற்றையெல்லாம் கணக்கிலெடுத்துக் கொண்டு முழு மனிதனை அடையாளங்கான முயலுகிறது. குலத்தாலும் இடத்தாலும் அதன் எல்லைகள் மிக விரிந்தவை.

இவ்வாறாக மானிட இயலை உடல்சார் மானிடவியல், பண்பாட்டு மானிடவியல், தொல்லியல் மானிடவியல் மொழியியல் மானிடவியல், சமூக மானிடவியல், சமுதாய மானிடவியல் என பல வகைகளாக மானிடவியலை பிரித்து மனித இனங்களை ஆய்வு செய்வதற்கு ஏற்றதாக அமைகிறது.

## முடிவுரை

பல மானிடவியல் கூறுகள் இருப்பினும் பண்பாட்டு மானிடவியலே சிறந்ததாக போற்றப்படுகிறது. மனிதனின் இயல்புகள் சமுதாயத்தோடு ஒன்றுபடும் தன்மைகளைப் பெற்றுள்ளது. அறிவுத்துறைகளிலேயே கலை அறிவியல் என்ற இரண்டையும் உள்ளடக்கிய ஒரு பரந்த பல்துறையாக இன்று விரிந்து நிற்பது மானிடவயிலேயாகும். உடலமைப்பு இயலை மானிடவியல் நோக்கில் ஆராய்வதன் மூலம் அளவு கடந்த முக்கியத்துவம் உள்ள கருத்தினை பெற முடிகிறது. பிற உயிரினங்களிடமிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுவது மனிதனுடைய பேச்சாற்றல். இதன் அடிப்படையில் எண்ணங்களைப் எடுத்துக் கொண்டு நாகரிகத்தையும் பண்பாட்டையும் பாருக்கு பறைசாற்றி மாற்றார்க்கும் கற்றுக் கொடுத்த இனம் தமிழினம்.

## References


Agathiyalingam, S., (1984) Valviyal Kalanjiyam, Volume 1, Tamil university, thanjavur, India.

Baktavatchala Bharathi, (2003) Panbattu Manidaviyal, Meiyappan Pathippagam, Chidambaram, India.

Naseemdeen, M., (1989) Idukki Mavatta Pazhangudi Makkal valviyal, annanm, Sivaganga, India.

Thamarai Pandian, S., (2008) Thentamizhaga Nattupura Valakkarukalill Edam Peyarvu, Arun Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License